Registered as a newspaper

ரெலிகுளோப்
ரெலிபோன் சேவையில்
வல்லவர்கள்.
நல்லவர்கள்
ரெலிகுளோப்
ஆர். ஜி. கட்டடம்,
பிரான்ஸி வீதி, யாழ் நகர்

உதயன்

உண்மை – அஞ்சாமை – நடு நிலைமை

விலை ரூ. 1/-

யாழ்நகரில்
பத்து ரெலிபோன்களைச்
சேவையில் ஈடுபடுத்தி
முழுமையாக ரெலிபோன்
சேவையிலேயே கண்ணும்
கருத்தும் உள்ள
ஒரே ஒரு நிறுவனம்
ரெலிகுளோப்
ரெலிபோன்: 25088 - பத்து
சமாந்தர லைன்கள்

சுடர்:- 1 யாழ்ப்பாணம் அக்ஷய ஞ புரட்டாதி மீ 21 ௳ செவ்வாய்க்கிழமை ஹிஜ்ரி 1406 ஸபர் பிறை 2 (07-10-1986) UTHAYAN A LIVELY TAMIL DAILY கதிர்:- 274

புதிய பணநோட்டு: புழக்கத்தில்விட புலிகள் ஏற்பாடு

அடுத்த வருட ஆரம்பத்தில் வரும் என்று அறிக்கை

யாழ்ப்பாணம், அக்டோபர் 7

புதிய பணநோட்டுக்களை 1987ஆம் ஆண்டிலிருந்து புழக்கத்திற்கு விடுவதற்கு தாம் நடவடிக்கை எடுத்து வருவதாக தமிழீழ விடுதலைப் புலிகள் அறிவித்திருக்கிறார்கள்.

இலங்கை அரசின் நிர்வாக அமைப்பைத் தூக்கி எறிந்து தமிழ் மக்களுக்கான பொருளாதார அமைப்பைக் கையாளுவதறகே இந்த நடவடிக்கை என புலிகள் அறிவித்திருக்கின்றனர்.

இதுதொடர்பாக புலிகள் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

சுதந்திர தமிழீழத்திற்கான போராட்டம் முனைப்பாக முன்னேறிக் கொண்டிருக்கும் இன்றைய காலகட்டத்தில் எமது மக்களைப் பாதிக்கின்ற சகலவிதமான அம்சங்களிலும் நமது கவனத்தைச் செலுத்த வேண்டிய கடமைப்பாட்டை நாம் கொண்டிருக்கிறோம்.

இராணுவ ரீதியான வெற்றிகளை அடைந்து நாளும்பொழுதும் சுதந்திர தமிழீழத்திற்கான பயணம் முன்னேறிச் செல்கையில் எதிரியின் பிடியை சகல அம்சங்களிலும் இருந்தும் நீக்குவது அவசியமாகின்றது.

அத்துடன் தமிழீழம் சகலவிதமான பரிமாணங்களுடனும் மலர்ந்து வருகின்றது என்பதனை சர்வதேச ரீதியாக வெளிக்காட்டவேண்டியுள்ளது.

சிறீலங்கா இனவாத அரசின் நிர்வாக அமைப்பைத் தூக்கியெறிந்து எமது மக்களுக்கான பொருளாதார அமைப்பைக் கையாளுவதற்காக எமது நாட்டிற்கென்று

(4ஆம் பக்கம் பார்க்க)

ஊழியர்களை ஏற்றச் சென்ற

மினிவான் மீது சிப்பாய்கள் சூடு

கோட்டை 'சென்றி' யிலிருந்து

யாழ்ப்பாணம், அக். 7

யாழ் - கோட்டை வங்கிக்கு வேலைக்கு சென்று வரும் ஊழியர்களை ஏற்றி வரச் சென்ற மினிவான் மீது நேற்று சிப்பாய்கள் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர்.

இதனால் வானின் கண்ணாடிகள் உடைந்து நொருங்கின சாரதி கயிரிழையில் உயிர் தப்பினார்.

கோட்டை வங்கியில் கடமையாற்றும் ஊழியர்களை ஏற்றி இறக்குவதற்கு என தினமும் மினிவான் சென்று வருவது வழக்கம்.

நேற்றும் வழமை போல் 12 மணி அளவில் கடற்கரை வீதியூடாகச் சென்ற மினிவான் யாழ் மாநகர சபைக்கு அண்மையில் சென்ற சமயம் சென்றியில் இருந்த சிப்பாய்கள் வான் மீது திடீரென துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர்.

எனினும் சாரதி சாமர்த்தியமாக வானைத் திருப்பிக் கொண்டதால் அவர் தப்பித்துக் கொண்டார்.

வானின் கண்ணாடிகள் மட்டும் உடைந்து நொருங்கின. (உ - 10)

முருங்கனில் நிலக்கண்ணி!

இரு சிப்பாய்கள் பலி

மன்னார், அக். 7

மன்னார் முருங்கனில் நேற்று நண்பகல் நிலக்கண்ணி வெடித்தாக்குதலில் இரு இராணுவ சிப்பாய்கள் உயிரிழந்தனர்.

நடந்து சென்ற சிப்பாய்களுக்குப் பின்னால் போய்க்கொண்டிருந்த ஜீப்பே நிலக்கண்ணி வெடிக்குள் சிக்கியது.

ஜீப் சாரதி கே. எம். ஜெயரத்ன, சிப்பாய் வெலத்தரத்தின ஆகியோரே அந்த இடத்தில் உயிரிழந்தனர் (உ-எ)

புலிகள் உரிமை

யாழ்ப்பாணம், அக். 7

மன்னார் மாவட்டம் [illegible] தாழ்வில் படையினர் ரோந்து வந்த ஜீப்வண்டி கண்ணி வெடியில் சிக்கி முற்றாகச் சிதைந்த சம்பவத்துக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் உரிமை கோரியிருக்கின்றனர்.

இந்தத் தரைக்கண்ணி வெடித்தாக்குதலில் ஜீப்பில் வந்த 4 இராணுவத்தினரும் கொல்லப்பட்டதாகவும் —

ஏனைய இராணுவத்தினர் எதிர்த் தாக்குதல் நடவடிக்கைகளில் ஈடுபடாது பின்வாங்கி [illegible] அடைந்ததாகவும் புலிகள் விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (உ)

சிப்பாய்கள் செய்த உதவி!

யாழ்ப்பாணம், அக். 7

மின் கம்பத்தில் இருந்து விழுந்தவரை சிப்பாய்கள் காப்பாற்றி முதலுதவி செய்தனர்.

கிளிநொச்சியில் கடந்த வெள்ளிக்கிழமை இச்சம்பவம் நடைபெற்றது.

தெய்வேந்திரம் என அழைக்கப்படும் இளைஞர் ஒருவர் கிளிநொச்சி [illegible] அண்மையில் உள்ள மின்கம்பத்தில் திருத்த வேலைகளுக்காக ஏறிய பொழுது அதிர்ச்சி காரணமாக கீழே விழுந்ததாகக் கூறப்படுகிறது.

இதனைக் கண்ட சிப்பாய்கள் உடனடியாக அவரைக் காப்பாற்றி முதலுதவி சிகிச்சை செய்த பின் யாழ் ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர். (உ10)

முச்சந்தி முனி



பேச்சாம் பேச்சாம் சமாதானப் பேச்சாம்; வீச்சாம் வீச்சாம் வெளியிலே இருந்து ஆயுத வீச்சாம்! வீச்சா வருகுதாம் பல பக்கத்தாலே இருந்தும்.....!

எகிப்திலிருந்து ஆயுதம் வாங்க அரசாங்கம் முயற்சி

லண்டன், அக்டோபர் 7

எகிப்தும், இலங்கைக்கு ஆயுதங்களை வழங்குவதற்கு முன்வந்திருக்கிறது.

இது சம்பந்தமான பேச்சுக்கள் அண்மையில் கெய்ரோவில் நடந்தன.

எகிப்திய அரச அதிகாரிகளுக்கும் இலங்கை அரச அதிகாரிகளுக்கும் இடையே நடந்த பேச்சுக்கள் இறுதியாக்கப்பட்டுள்ளன என்று ராஜதந்திர வட்டாரங்கள் மூலம் அறியவருகிறது.

அமெரிக்காவிடம் இருந்து ஆயுதங்களைப் பெறும் நாடுகளில் எகிப்தும் ஒன்று என்பது குறிப்பிடத்தக்கது.

இலங்கை இப்போது தென் ஆபிரிக்கா, பிரிட்டன், பாகிஸ்தான், சீனா, இஸ்ரேல் ஆகிய நாடுகளிடம் இருந்து ஆயுதக் கொள்வனவு செய்கின்றது தெரிந்ததே.

இதனிடையில் சிறிய ஆயுதத் தொழிற்சாலை ஒன்றை இலங்கையில் நிறுவிக் கொடுப்பதற்கு யூகோஸ்லேவாகியா முன் வந்துள்ளது. இது சம்பந்தமாக இரண்டு நாட்டு அரசுகளுக்கும்

(4ஆம் பக்கம் பார்க்க)

உண்ணாவிரதம் இருந்த 6 இளைஞர்கள் கைது

நயினாதீவில் சம்பவம்

யாழ்ப்பாணம், அக். 7

நயினாதீவில் ஒரு வீட்டுக்குள் [illegible] ஆறு இளைஞர்களை இராணுவத்தினர் கைது செய்தனர்.

இந்த ஆறு பேரும் கடந்த முதலாம் திகதி நயினாதீவில் நடைபெற்ற உண்ணாவிரதப் போராட்டத்தில் கலந்து கொண்டவர்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

பூஸா, வெலிக்கடைச் சிறைக் கைதிகளின் சார்பில்வரை உண்ணாவிரதப் போராட்டத்துக்கு ஆதரவாக இந்த உண்ணாவிரதம் நடத்தப்பட்டது என்றும்—

அவ்வேளையில் அங்கு படையினர் வந்ததாகவும் கூறப்படுகிறது.

அங்கு நடைபெறும் நிகழ்ச்சி குறித்து படையினர் விசாரித்து விட்டுச் சென்றனர்.

பின்னர் இந்த உண்ணாவிரதத்தில் பங்குபற்றியதாகக் கூறப்படும் ஆறு பேரை ஞாயிறன்று படையினர் கைது செய்ததாகக் கூறப்படுகிறது.

வி. ஆர். கே இரத்தினசபாபதி (வயது 45) பி. ஆர் குலசிங்கம் (வயது 23), பி. ஜெயகுமார் (வயது 20) ஹரன் (வயது 18) எஸ். பதியழகன் (வயது 18) என். கருணாகரகுருமூர்த்தி (வயது 26) ஆகியோரே கைது செய்யப்பட்டனர்கள் என்று கூறப்படுகிறது. (உ)

மட்டக்களப்பில் வங்கிக் கொள்ளை

மட்டக்களப்பு, அக். 7

மட்டக்களப்பு ஸ்டேஷன் வீதியில் உள்ள தேசிய சேமிப்பு வங்கிக் கிளை நேற்றுக்காலை இனந்தெரியாத இளைஞர்களினால் கொள்ளையிடப்பட்டது.

காலை 10-30 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றது.

சுமார் 12 ஆயிரம் ரூபா கொள்ளை இடப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

இச்சம்பவத்தைத் தொடர்ந்து ஆயுதப் படையினர் மட்டக்களப்பு நகரில் ரோந்தில் ஈடுபட்டனர் (உ-எ)

பஸ்சாரதி விபத்தில் மரணம்

யாழ்ப்பாணம், அக். 7

பஸ்ஸின் மிதி பலகையில் நின்று பிரயாணம் செய்த இ. போ. ச. பஸ் சாரதி ஒருவர் மின் கம்பத்துடன் மோதி மரணமானார்.

கிளிநொச்சி பஸ் டிப்போவில் சாரதியாகக் கடமையாற்றிய சின்னட்டி சிங்கராசா (46 வயது) என்பவரே இறந்தவர் ஆவார்.

நல்லூரில் நேற்றுக் காலை இச்சம்பவம் நடந்தது.

மரண விசாரணையை யாழ் பதில் நீதிவான் திரு ஏ. அன்ரனி நடத்தினார். (இ-10)

துறைமுக தொழிலாளர் கொலை

தாய்லாந்து நாட்டு மாலுமிகள் 23 பேர் விளக்கமறியலில்

கொழும்பு, அக். 7

இரண்டு இலங்கைத் துறைமுகத் தொழிலாளர்களைக் கொலைசெய்தார்கள் என்ற குற்றச்சாட்டின்பேரில் தாய்லாந்து நாட்டைச் சேர்ந்த 23 மாலுமிகள் எதிர்வரும் புதன்கிழமை வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

கொழும்பு மாஜிஸ்திரேட் நீதிமன்ற பிரதம நீதிவான் விளக்கமறியல் உத்தரவை விடுத்தார்.

முகத்துவாரத்தில் இச்சம்பவம் நேற்று முன்தினம் இடம் பெற்றது.

கைது செய்யப் பட்ட தாய்லாந்து மாலுமிகளில் 'மொங்கல் சமுட' என்ற இழுவைக் கப்பல் கப்டனும் ஒருவர்.

உயிரிழந்த இலங்கை துறைமுகத் தொழிலாளர்கள் இரண்டு பேரின் பெயர்கள் வருமாறு:

1. எம். கே. சுகததாஸ குணரத்ன, 18 வயது
2. பெர்னுட் பெரேரா வயது 29

கத்திக்குத்துக் காயங்களுக்காளாகி இருவரும் உயிரிழந்தனர்.

புதன்கிழமை அடையாள அணிவகுப்பு இடம் பெறும். (உ-எ)

சுபநேரம்

7—10—1986
செவ்வாய்க்கிழமை
சுபநேரம்:
10.32 முதல் 12 02 வரை
ராகுகாலம்:
3.02 முதல் 4.32 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்
சதுர்த்தி விரதம்

மக்களை அழைக்கும் சிப்பாய்கள்

யாழ்ப்பாணம், அக். 7

சகல இராணுவ முகாம்களிலுமுள்ள இராணுவத்தினர் தம்மைச் சுற்றி ஆயிரம் மீற்றரில் உள்ள சகலரையும் குடிபெயரும்படி கேட்டுள்ளனர்.

ஆனால் கிளிநொச்சி இராணுவத்தினர் ஆயிரம் மீற்றர் பகுதியிலிருந்து இடம் பெயர்ந்தவர்களை மீள வந்து குடியேறுமாறு வற்புறுத்துகிறார்கள்.

இவ்வாறு பிரசைகள் குழுக்களின் ஒன்றிணைப்புக் குழுக் கூட்டத்தில் கிளிநொச்சி பிரசைகள் குழுப் பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார். (உ-5)

பாலம் திருத்துவதற்கு

15 டிராக்டர்கள் பலவந்தமாக பாவிக்கப்பட்டன

மட்டக்களப்பு, அக். 7

வவுணதீவு - வலையிறவு பாலத் திருத்தவேலைகளுக்கு தனியாரின் ட்ராக்டர்கள் பலவந்தமாக ஆயுதபடையினரால் நேற்றுக் காலை எடுத்துச் செல்லப்பட்டன.

பாலத் திருத்த வேலைகளுக்குத் தேவையான மண், கல் முதலியவற்றை ஏற்றுவதற்கு இந்த ட்ராக்டர்கள் படையினரால் பயன்படுத்தப்பட்டன.

பதினைந்துக்கு அதிகமான ட்ராக்டர்கள் இப்படிக் கொண்டு செல்லப் பட்டன.

வேலைகள் முடிவடைந்ததும் மாலையில் அவை திருப்பி அனுப்பப்பட்டன. ட்ராக்டர்களுடன் சாரதிகளும் அழைத்துச் செல்லப்பட்டனர் (உ-எ)

சாம்பல்தீவு, சல்லிக்கு வெளியார் செல்ல நேற்றும் அனுமதி இல்லை

திருகோணமலை அக். 7

ஆயுதபடையினரின் முற்றுகைக்குள்ளான சாம்பல் தீவு, சல்லி கிராமங்களுக்குள் வெளியார் சென்று வர நேற்றும் அனுமதிக்கப்படவில்லை.

நேற்று மக்களை இக் கிராமங்களுக்கு செல்ல படையினர் அனுமதிப்பர் என்று முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது.

ஆனால் நேற்று எவரும் செல்ல அனுமதிக்கப் படவில்லை.

இதனிடையில் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் லோறன்ஸ் கிலோரி என்ற முப்பத்தொன்பது வயது தமிழ் இளைஞரின் சடலம் திருமலை ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டது.

சாம்பல்தீவுக் கிராமத்தில் காணப்பட்ட சில சடலங்கள் எரிக்கப்பட்டு விட்டன என்று தெரிய வருகின்றது.

இரண்டு கிராமங்களிலும் உள்ள வீடுகளில் எவரும் இல்லை என்றும் புகைந்து கொண்டு இருப்பதாகவும் தெரிகிறது.

இரண்டு கிராமங்களையும் சேர்ந்த 472 குடும்பங்களைச் சேர்ந்த 1782 பேர் சாம்பல் தீவுத் தேவாலயத்தில் அகதிகளாக உள்ளனர்.

இம் முற்றுகையின்

(4ஆம் பக்கம் பார்க்க)

விடுதலை அமைப்புகள் வெற்றி பெறக்கூடியதாக தீர்வு காணவேண்டும்

காங்கிரஸ் (ஐ) கட்சி தீர்மானம்

சென்னை, அக். 7

ஈழ விடுதலை அமைப்புகளுக்கு வெற்றி கிடைக்கக் கூடிய வகையில் அரசியல் தீர்வு காணப்பட வேண்டும்.

இந்திய ஜனாதிபதிக்கு இது குறித்து அறிக்கை ஒன்றை சமர்ப்பிப்பது என்று அகில இந்திய காங்கிரஸ் (ஐ) கட்சியின் செயற்குழு சென்னையில் கூடி தீர்மானம் நிறைவேற்றியது.

இலங்கையில் அமைதி ஏற்பட வேண்டும். ஈழ விடுதலை இயக்கங்கள் வெற்றி அடைய வேண்டும். இதற்கு ஏற்ப அரசியல் தீர்வு காணப்பட வேண்டும். இதனை அடைய இந்தியா, இலங்கை, ஐ. நா. முயல வேண்டும்—

இப்படி அத்தீர்மானத்தில் கூறப்பட்டுள்ளது. (உ-எ)

தோடம்பழத்திற்கு பெரும் கிராக்கி

யாழ்ப்பாணம், அக். 7

யாழ்ப்பாணத்தில் தோடம்பழத்திற்கு அதிக கிராக்கி ஏற்பட்டுள்ளது.

ஒரு பழம் இருபது ரூபா முதல் முப்பது ரூபாவரை விற்கப்படுகிறது.

கடந்த ஒரு வாரகாலமாக லொறிப் போக்குவரத்துக்கள் நிறுத்தப்பட்டதன் காரணமாகவே இத்திடீர் விலை ஏற்றம் எனத் தெரிவிக்கப்படுகிறது (உ-10)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

சிமெந்து உற்பத்திக்கு உள்ளூரில் களிமண்; செயற்திட்டம் வெற்றி

காங்கேசன்துறை, அக் 7

காங்கேசன் சீமெந்து ஆலையில் சீமெந்து உற்பத்திக்கு உள்ளூர்க் களிமண்ணை பயன்படுத்தும் செயற்திட்டம் வெற்றிகரமாக செயல்படுவதால் இப்பகுதி குளங்களிலிருந்து களிமண்ணை அகழ்ந்து எடுக்கும் வேலைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

காங்கேசன் சீமெந்து ஆலையில் சிமெந்து உற்பத்திக்கு உபயோகிக்கப்பட்டுவந்த களிமண் முன்னர் முருங்கனில் இருந்து புகையிரத வண்டிகள் மூலம் தருவிக்கப்பட்டது.

தற்சமயம் அதைப் பெறுவதில் சிக்கல் நிலவுவதால் உள்ளூர் களிமண்ணைக் கொண்டு சிமெந்து உற்பத்தி செய்ய ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு அது வெற்றியளித்தது.

அதையடுத்து வலி வடக்குப் பகுதியில் பல குளங்களிலிருந்து களிமண் அகழ்ந்தெடுக்கப்பட்டு சிமெந்து உற்பத்திக்கு உபயோகப்படுத்தப்பட்டது.

தற்போது உடுவில் குளத்தில் இருந்து பெருந்தொகையாக களிமண்ணை அகழ்ந்து எடுக்கும் வேலைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

களிமண்ணை அகழ்ந்தெடுத்து லொறிகள், ட்ராக்டர் மூலம் சிமெந்து ஆலையில் சேர்ப்பிக்கும் வேலையில் பெருந்தொகையான தொழிலாளர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். (உ-68)

தீவுப்பகுதி

வீதிகள் திருத்தப்படும்

தார் வந்து சேர்ந்தது

ஊர்காவற்றுறை, அக். 7

ஊர்காவற்றுறை தொகுதியில் இவ்வாண்டு மேற்கொள்ளப்படவுள்ள சிறு வீதிகளுக்கான திருத்த வேலைகளை மேற்கொள்ள நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

கல்லுப்போட்டு தார் ஊற்றி திருத்தப்பட வேண்டிய வீதிகள் தார் வந்து சேராமையினால் தடைப்பட்டிருந்தன.

யாழ்ப்பாண அரசாங்க அதிபர் எடுத்துக் கொண்ட தீவிர முயற்சியின் பயனாக கொழும்பில் கொள்வனவு செய்யப்பட்ட தார் பீப்பாக்கள் துறைமுக அதிகார சபைக்குச் சொந்தமான கப்பலொன்றின் மூலம் காங்கேசன்துறைக்கு எடுத்து வரப்பட்டு அங்கிருந்து தனியார் போக்குவரத்து லொறிகள் மூலம் குடாநாட்டின் பல பகுதிகளுக்கு எடுத்துச் செல்லப்பட்டன.

ஆனால் தீவுப்பகுதிக்குத் தேவையான தார் பீப்பாக்கள் போக்குவரத்து வசதியீனங்கள் காரணமாக அராலி அபிவிருத்திச் சபை உப அலுவலகத்தில் வைக்கப்பட்டிருந்தன.

அவை அனைத்தும் தற்போது இங்கு கொண்டு வரப்பட்டுள்ளன. (உ-16)

குருளைச்சாரணர் ஆண்டுவிழா

யாழ்ப்பாணம், அக் 7

குருளைச் சாரணர் வருடாந்த ஆண்டு விழா இம்மாதம் 11ஆம் திகதி கனகரட்ணம் மத்திய மகா வித்தியாலயத்தில் யாழ் மாவட்ட சாரணர் கிளைச் சங்கத்தால் கொண்டாடப்படவுள்ளது,

இவ்விழாவிற்கான அழைப்பு விண்ணப்பங்களை குருளைச் சாரணர் தலைவர்களுக்கு அந்தந்தப் பாடசாலை அதிபர் ஊடாக உதவி மாவட்ட ஆணையாளர் திரு டோ. வி. மு. இராசசிங்கம் அனுப்பியுள்ளார்

இலவச வகுப்பு

கரவெட்டி, அக். 7

புலோலி தெற்கு பிரசைகள் குழு அப்பகுதி இளைஞர்கள், யுவதிகளுக்கான இலவச ஆங்கில மொழி வகுப்புக்களை ஆரம்பித்துள்ளது.

இவ் வகுப்புக்கள் புற்றளை சனசமூக நிலைய மண்டபத்தில் மாலை வேளைகளில்நடைபெறும்.

சைக்கிளில் 'டபிள்' ஏறும் சிப்பாய்கள்!

மட்டக்களப்பு, அக் 7

மட்டக்களப்பு பகுதியில் ஆயுதபடையினரின் வாகனரோந்து தற்போது குறைந்துள்ளது. இருப்பினும் கால்நடையாக இடையிடையே ரோந்து நடமாடுவதை அவதானிக்க கூடியதாகவுள்ளது

வீதி, வீதியாக கால்நடை ரோந்து செல்லும் படையினர் சந்தேகமான இடங்களில் கம்பிகளை குத்தி வெடிகளை தேடுகிறார்கள்.

நீண்ட தூரம் நடந்து விட்டு முகாமுக்கு திரும்பும்போது களைத்துவிட்ட இவர்கள் வழியில் வரும் பொது மக்களின் சைக்கிள்களில் 'டபிள்' ஏறுகிறார்கள்.

சிறுவர்கள், வயோதிபர்கள் சைக்கிளில் வந்தால் படையினர் அவர்களை சைக்கிள் பாரில் வைத்து தாம் சைக்கிளை மிதிக்கிறார்கள்

சைக்கிள் சவாரியில் செல்லும்போது குஷியாக உரையாடும் படையினர் குடும்ப விவரங்கள், தொழில், நாட்டின் நிலவரம், இனப்பிரச்சினை உட்பட பல்வேறு விடயங்களை பற்றிக் கருத்துக்களையும் பரிமாறுகிறார்கள்.

புலிகள் கண்ணி வைப்பதால் எமக்கு கஷ்டமாக இருக்கிறது எவ்வளவு தூரம்தான் நாம் நடப்பது? ரொம்ப களைப்பாக உள்ளது என தெரிவிக்கிறார்கள்

படையினரை 'டபிள்' ஏற்றும் சந்தர்ப்பம் பொது மக்களுக்கு மட்டுமல்ல செய்தியாளர்களுக்கும் கிடைத்துள்ளது. (உ-21)

யாழ் மாவட்டத்தில் போஷாக்கு வாரம்

யாழ்ப்பாணம், அக் 7

யாழ் மாவட்டத்தில் இம்மாதம் 20 ஆம் திகதி முதல் 27 ஆம் திகதி வரை 'போஷாக்கு வாரம்' கொண்டாடப்படவுள்ளதாக திட்டமிடல் உதவிப் பணிப்பாளர் திரு கே பாலகிருஷ்ணன் தெரிவித்தார்.

திட்டம் செயலாக்கல் அமைச்சின் உணவு ஊட்டச்சத்துப் பிரிவின் சார்பாக — சகல மாவட்டங்களிலும் உள்ள திட்டமிடல் கணிப்பகங்களூடாக நாடு முழுவதும் போஷாக்கு வாரம் கொண்டாடப்படுகிறது

இவ் வாரத்தில் மாவட்டரீதியான ஒரு நாள் கருத்தரங்கும், பாடசாலை மாணவர்களிடையே போஷாக்கு பற்றிய அறிவுப் போட்டியும் நடத்தப்பட்டு பரிசில்களும் வழங்கப் படவுள்ளன

தாய்மார்கள், மாணவர்களுக்கான கருத்தரங்கில் போஷாக்குத் துறையில் அனுபவமுள்ள பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் உரையாற்றுவார்கள். (உ 5)

சனசமூக நிலையங்களுக்குரிய அரச நன்கொடையை உடன் பெறுக

பொதுச் செயலாளர் கோரிக்கை

யாழ்ப்பாணம், அக் 7

சனசமூக நிலையங்களுக்கு அரசாங்கத்தால் வழங்கப்படும் நன்கொடைப் பணத்தின் 1985 ஆம் ஆண்டுக்குரிய கொடுப்பனவுகளை இதுவரை பெற்றுக் கொள்ளாத சனசமூக நிலையங்கள் தமது பிரதிநிதிகள் மூலம் உடனடியாக அவற்றைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

சனசமூக நிலையங்களின் சமாஜப் பொதுச் செயலாளர் திரு சி சி. வரதராஜா இப்படி வேண்டுகோள் விடுத்திருக்கிறார்.

யாழ் மாவட்டத்தில் பதிவு செய்யப்பட்ட 697 சன சமூக நிலையங்கள் இருக்கின்றன.

அனேக சனசமூக நிலையங்கள் 1985 ஆம் ஆண்டுக்குரிய நன்கொடைப் பணத்தை இன்றுவரை பெறாதிருப்பதால் 1986 ஆம் ஆண்டுக்குரிய நன்கொடையைப் பெறுவதில் மேலும் காலதாமதம் ஏற்படும்

இந்தக் கொடுப்பனவுகளை சனசமூக நிலையங்களின் பிரதிநிதிகள் தத்தமது பகுதியில் உள்ள யாழ் மாவட்ட அபிவிருத்திச் சபையின் உப அலுவலகங்களில் பெற்றுக் கொள்ளலாம்

இது விடயமாக யாழ் மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. அன்ரன் அம்பிரஸ் பல சுற்றுநிருபங்களை அனுப்பியும் யாழ் மாவட்ட அபிவிருத்திச் சபையின் சில உப அலுவலகங்களும் சில சனசமூக நிலையங்களும் போதிய அக்கறை கொள்ளவில்லை.

- இப்படி திரு. வரதராஜா கவலை தெரிவித்தார் (உ)

செய்திக்கொத்து

சிகிச்சை முகாம்

கிளிநொச்சி அக். 7

கிளிநொச்சி இரத்தினபுரம், திருவையாறு மக்களது நன்மை கருதி எதிர்வரும் 15ஆம் திகதி காலை திருவையாறு பாடசாலையிலும் மாலை இரத்தினபுரத்திலும் இரண்டு இலவச சிகிச்சை முகாம் நடத்தப்படவுள்ளது

இச் சிகிச்சையின் போது கர்ப்பிணிப் பெண்களுக்கான சிகிச்சையும், குழந்தைகளுக்கான தடுப்பூசி ஏற்றுதலும் இடம் பெறும்.

இவற்றுக்கான சகல ஏற்பாடுகளையும் சுகாதார பகுதியினரின் அனுமதியுடன் இப் பகுதி கிராம அபிவிருத்திச் சங்கங்கள் மேற்கொண்டு வருகின்றன (உ-76)

சத்துணவு பால்மா விநியோகம்

கிளிநொச்சி அக். 7

கிளிநொச்சி இரத்தினபுரம் கிராம அபிவிருத்திச் சங்க எல்லைக்குள் வசிக்கும் கர்ப்பிணிகள், குழந்தைகள், பாலூட்டும் தாய்மார் உட்பட 68 பேருக்கு கடந்த வாரம் சத்துணவுப் பால்மா விநியோகிக்கப்பட்டது.

கிளிநொச்சி பிரசைகள் குழுவின் ஏற்பாட்டில் றெட்பாணா நிறுவனத்தினரால் வழங்கப்பட்ட இந்த இலவச பால்மா இரத்தினபுரம் கிராம அபிவிருத்திச் சங்கத்தினரால் அப்பகுதி மக்களுக்கு விநியோகிக்கப்பட்டது.

இவ்வாறு ஏனைய கிளிநொச்சி உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள 56 கிராம அபிவிருத்திச் சங்கங்கள் ஊடாகவும் இலவச பால்மா வழங்கப் பட்டு வருகின்றன. (உ-76)

வடிகால் திருத்தியமைப்பு

ஊர்காவற்றுறை, அக் 7

சுருவில் ஐயனார் கோவிலுக்கு அருகாமையில் உள்ள வெள்ளம் பாயும் பிரதான வடிகால் தற்போது திருத்தப்பட்டு வருகிறது.

மழை காலங்களில், வயல்களிலும், வீடுகளைச் சுற்றியும் தேங்கும் நீரானது கடலுக்கு வடிந்து செல்வதற்காக அமைக்கப்பட்ட வடிகாலானது தூர்ந்து போய் சீரற்றுக் கிடக்கிறது

பொதுமக்கள் இதனைத் திருத்தும் பணியில் ஈடுபட்டுள்ளனர். (உ-16)

மரமுந்திரிகை கன்றுகள் விற்பனை

பருத்தித்துறை அக். 7

அம்பன் கிராம அபிவிருத்திச் சபை நல்லின மரமுந்திரிகை நாற்றுக்களை விற்பனை செய்யவுள்ளது.

அம்பன் விவசாயப் போதனாசிரியர் பகுதியில் இவ்வருடம் சுமார் 6 ஆயிரம் மரமுந்திரிகைக் கன்றுகள் நாட்டப்படவுள்ளன.

இக் கன்றுகள் இப்பகுதி விவசாயிகளுக்கு தலா மூன்று ரூபா வீதம் விற்பனை செய்யப்படவுள்ளது என அம்பன் விவசாயப் போதனாசிரியர் திரு வ. பரமேஸ்வரன் அறிவித்துள்ளார்

பட்டப் படிப்புகள் கல்லூரி
கல்வியாண்டு 1987 | 88

இலங்கைப் பல்கலைக்கழக வெளிநிலை விரிவுரைகளும் லண்டன் கணக்கியல் பரீட்சைகளுக்கான விரிவுரைகளும்

12-10-1986 இல் ஆரம்பமாகின்றன

G.A.Q — B.A.
G.S.Q. — B.Sc.
FIRST IN COMMERCE — B.Com.
FIRST IN LAWS — LL;B. •
CHARTERED (Tamil)
I.A.B. — iCMA
A.A.T.
COMPUTER PROGRAMMING
(Basic Language Theory)

விபரங்களையும் விண்ணப்பப் படிவங்களையும் பெற விரும்புவோர் நேரில் / தபால் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

உதவிப் பதிவாளர்,
பட்டப் படிப்புகள் கல்லூரி
148/1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

மாநிலம்-மாவட்டம்-உள்ளூர்

சமய நெறியைக் கடைப்பிடித்து நல்வாழ்வுக்கு வழி காண்போம்

ஏழாலை சைவசமயஅபிவிருத்தி சங்க பரிசளிப்பு விழாவில் உரை

காங்கேசன்துறை அக் 7

எமக்கு எத்தனை துன்பங்கள் வந்தபோதும் எமது பாரம்பரியம், பண்பாடுகளை நாம் பேணிப் பாதுகாக்க வேண்டும். எமது வாழ்க்கைக்கு வழி காட்டும் சமய நெறியைக் கடைப்பிடித்து நல்வாழ்வுக்கு வழி சமைக்க வேண்டும்

ஏழாலை சைவ சமய அபிவிருத்திச் சங்க 64 ஆவது ஆண்டு பரிசளிப்பு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றிய யாழ் பல்கலைக் கழக நூலகர் திரு சி. முருகவேள் மேற்கண்டவாறு கூறினார்.

ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தியாசாலையில் சைவ சமய அபிவிருத்திச் சங்கத் தலைவர் திரு. சி. சுக்கிரீவன் தலைமையில் விழா நடைபெற்றது

திருக்கேதீஸ்வர ஆலயத் திருப்பணிச் சபைத் தலைவர் திரு மு ஞானப்பிரகாசம் மங்கள விளக்கேற்றி வைபவத்தை ஆரம்பித்து வைத்தார்.

விழாவில் அருள்மொழி அரசி வித்வான் வசந்தா வைத்தியநாதன் பேசுகையில்,

எமது மத்தியில் எல்லாவற்றிற்கும் தட்டுப்பாடு நிலவும் இன்றைய சூழ்நிலையில் மரணங்கள் மட்டும் தாராளமாக இடம் பெறுகின்றன இந்நிலையில் தர்மத்தின் வழியில் நாம் சென்றால் வெற்றி கிட்டும் ஒரு உயிரைக் காப்பாற்ற இன்னொரு உயிரைக் கொல்வதும் தர்மமே என்றார்.

கோப்பாய் ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர் திருமதி மங்கையர்க்கரசி திருச்சிற்றம்பலம் பேசுகையில், சைவ வாழ்வில் உயர்வு பெற அனுஷ்டானமும், கல்வியறிவும், பண்பும் அவசியம்

இளமையில் இருந்தே இவற்றைப் பேணுவது மிகவும் கஷ்டமானது. ஆனால் சிவஸ்ரீ தா. சர்வேஸ்வரக் குருக்கள் இளமையிலேயே சிறந்த சிவாச்சாரியாராகவும், குருவாகவும், மிளிருவது மிகவும் பாராட்டுக்குரியது.

சமய வளர்ச்சிக்கு இவ்வாறான சிவாச்சாரியார்களின் பங்கு மிகவும் அவசியமானது என்றார்.

உடுவில் உதவி அரசாங்க அதிபர் திரு க. காலிங்கம் பேசுகையில் சைவத்தையும் தமிழையும் காப்பாற்ற இளைஞர்களால் தான் முடியும் என்றார்

விழாவில் தலைமையுரை ஆற்றிய திரு சி. சுக்கிரீவன் அண்மையில் ஏற்பட்ட அனர்த்தங்களில் ஆகக் கூடுதலான அழிவுகள் சைவமக்களுக்கும் சைவாலயங்களுக்கும் மட்டுமே ஏற்பட்டுள்ளன என்றார்.

மற்றும் சிவஸ்ரீ சி முத்துக்குமாரசுவாமிக் குருக்கள் சைவப் புலவர் சு. சச்சிதானந்தசிவம், பண்டிதர் மு கந்தையா உட்படப் பலர் பேசினர்.

விழாவில் சுன்னாகம் கதிரமலைச் சிவன்கோயில் பிரதம சிவாச்சாரியார் சிவஸ்ரீ தா. சர்வேஸ்வரக் குருக்கள் பொன்னாடை போர்த்தி பொற்கிழி வழங்கி கௌரவிக்கப்பட்டார் (இ-68)

புகார்

கிளிநொச்சி அக். 7

கிளிநொச்சி அசம்பாவிதங்களினால் பாதிக்கப்பட்டு தமது வதிவிடங்களை விட்டு முதலில் வெளியேறிய கிளிநொச்சி இராணுவ முகாமின் எல்லையாகவுள்ள இரத்தினபுரம் கிராம வாசிகளான - சுமார் 150 குடும்பங்களுக்கு துயர்துடைப்பு நிவாரணம் வழங்கப்படாதமை குறித்து இரத்தினபுரம் கிராம அபிவிருத்திச் சங்கம் கிளிநொச்சி அரசாங்க அதிபர், உதவி அரசாங்க அதிபர், பிரசைகள் குழு ஆகியவற்றிற்கு எழுத்து மூலமும் நேரிலும் புகார் தெரிவித்துள்ளது. (உ-26)

அச்சுவேலிப் பகுதியில் பெற்றோல் தட்டுப்பாடு

அச்சுவேலி, அக் 7

அச்சுவேலிப் பகுதியில் பெற்றோலுக்கு பெரும் தட்டுப்பாடு நிலவுகின்றது

அச்சுவேலியில் முன்பு செயற்பட்டு வந்த எரிபொருட்கள் நிரப்பு நிலையம் தற்போது முழுமையாக செயற்படாமல் மூடப்பட்டுள்ளது

கோப்பாயில் இருந்து நெல்லியடி வரையிடைப்பட்ட பகுதியில் பெற்றோல் நிரப்பு நிலையம் எதுவும் இல்லாமல் இருப்பது குறிப்பிடத்தக்கது.

இதனால் பொதுமக்கள், விவசாயிகள் தமது தேவைக்கு பெற்றோல் மற்றும் எரிபொருட்களை பெற்றுக் கொள்வதற்கு சிரமப்படுகின்றனர் (உ-11)

சங்கானை வங்கிக்கிளை யாழ்நகரில் இயங்குவதால் பொதுமக்கள் கஷ்டம்

வட்டுக்கோட்டை, அக் 7

சங்கானை மக்கள் வங்கி யாழ்ப்பாணத்தில் இயங்கி வருவதால் அங்கு சுமார் 8 ஆயிரத்துக்கு மேற்பட்ட வாடிக்கையாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த கிளையை மீண்டும் சங்கானையில் இயங்க வைத்து பொது மக்களின் கஷ்டங்களை நீக்குமாறு வங்கி நிர்வாகத்திடம் பொது மக்கள் சார்பில் கோரிக்கை விடுக்கப்பட்டிருக்கிறது.

இக்கவங்கி யாழ்ப்பாணத்தில் இயங்கி வருவதால் அராலி, வட்டுக்கோட்டை, பொன்னாலை, சுழிபுரம், பண்ணாகம், சித்தன்கேணி, கண்டத்தரிப்பு, சங்கானை, சண்டிலிப்பாய் முதலான பல இடங்களிலுள்ள பொது மக்கள் பெரிதும் கஷ்டப்படுகின்றனர். [illegible] வாடிக்கையாளர்களும் தமது தேவைகளை நிறைவேற்றுவதற்காக யாழ்ப்பாணம் செல்லவேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர் (உ-161)

சாரணர் பாசறை 17,18, ஆம் திகதிகளில்

யாழ்ப்பாணம், அக் 7

யாழ்மாவட்ட பாடசாலைச் சாரணர்களுக்கான வருடாந்த பாசறை இம்மாதம் 17 ஆம் 18 ஆம் திகதிகளில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் நடைபெற உள்ளது.

யாழ் மாவட்ட சாரணர் கிளைச் சங்கத்தால் நடத்தப்படும் இப் பாசறையை மாவட்ட ஆணையாளர் [illegible] ஆரம்பித்து வைப்பார்.

இதில் கலந்து கொள்வதற்கான அழைப்பு விண்ணப்பங்களை பாடசாலை சாரணர் குழுத் தலைவர்களுக்கு அந்தந்த பாடசாலை அதிபர்கள் ஊடாக சாரணர் மாவட்ட உதவி ஆணையாளர் திரு. டோ. வி. மு. இராசசிங்கம் அனுப்பியுள்ளார்.

18 ஆம் திகதி 3 மணி முதல் 5 மணிவரை பார்வையாளர்கள் பாசறையை பார்வையிட அனுமதிக்கப்படுவர் (உ-7)

பிரயாண ஒழுங்குகள்

டென்மார்க் செல்வதற்கு உடனடியாக பிரயாண ஒழுங்குகள் செய்து கொடுக்கப்படும்.

★ கனடா
★ ஜேர்மன்
★ பிரான்ஸ்
★ டென்மார்க்
★ ஹொலண்ட்
★ பெல்ஜியம்

ஆகிய நாடுகளுக்கு பிரயாண ஒழுங்குகளை மேற்கொள்ளவும்
மற்றும்
பாஸ்போட், விசா,
பொன்ட், BOND ரிக்கட்
ஆகியனவும் செய்து கொடுக்கப்படும்.

INTERSUN GROUP

சின்னத்தம்பி அவெனியூ,
(மகளிர் கல்லூரிக்கருகாமையில்)
மானிப்பாய்.

ஈழத்தின் தமிழ் இதயங்களுக்கு ஓர் இனிமையான செய்தி!

ரெலிபோன்-ரெலக்ஸ் சேவைகள்

உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் வாழ்கின்ற உங்கள் உறவினர்களை அலைவரிசைகளில் அழைத்து உடனுக்குடன் தெளிவான குரலில் உரையாட குறைந்த செலவில் நிறைவான சேவை செய்ய முன்வந்துள்ளனர்

மைக்ரே கொம்யூனிக்கேசன்
ஸ்தாபனத்தார்

ரெலிபோன் ரெலக்ஸ் சேவையில் பல வருட கால அனுபவம் பெற்றவர்களின் தொழில் நுட்ப கண்காணிப்பின் கீழ் தங்கள் உன்னத சேவையை இரவு பகல் 24 மணி நேரமும் வழங்குகின்றார்கள்.

உங்கள் தேவையே எங்கள் சேவை

மைக்ரே கொம்யூனிக்கேசன்
கே.கே.எஸ். வீதி,
குளப்பிட்டிச் சந்தி, கொக்குவில்.

உதய சங்கற்பம்

உங்கள் உதடுகள் மூடட்டும், உள்ளம் திறக்கட்டும்.

-சுவாமி விவேகானந்தர்

உதயன்
உண்மை - [illegible] - [illegible]
இல. 15 2வது ஒழுங்கை
மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்,
தொலைபேசி 24805
22073
07-10-1986 த பெ. இல.23

தென் இலங்கைக்கு விளங்க வைத்தல்

இன பிரச்சினை விவகாரத்தில் புதிய முயற்சி ஒன்று மேற்கொள்ளப்பட இருப்பதாக செய்தி வந்திருக்கிறது.

ஈழத் தமிழ் மக்களின் ஆகக் குறைந்த பட்சக் கோரிக்கை, திம்பு மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட நான்கு அம்சக் கோரிக்கையாகும்.

பிரஸ்தாப நான்கு அம்சக் கோரிக்கையை தென்னிலங்கை மக்களுக்கு விளக்க முயற்சி மேற்கொள்ள இருப்பதாக இப்போது அறிவிக்கப்பட்டிருக்கிறது. அதுவே புதிய செய்தியாகும்.

* தமிழ்ப்பேசும் மக்கள் ஒரு தேசிய இனம் என்பதை அங்கீகரிக்க வேண்டும்
* அவர்களின் பாரம்பரிய பிரதேசம் அவர்களுக்கே சொந்தம் என்பதை உறுதிப்படுத்த வேண்டும்.
* தமிழ்ப்பேசும் மக்களின் சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்படுதல் வேண்டும்
* மலையக மக்களுக்குக் குடியுரிமை வழங்கப்பட வேண்டும். அவர்களுக்கு இப்போதுள்ள உடைமைகள் அவர்களுக்கே சொந்தமாக்கப்பட வேண்டும்

இவையே திம்புக் கோரிக்கைகளாகும். இந்த நான்கு அம்சங்களையும் தமிழ் மக்கள் ஆகக் குறைந்த அடிப்படைக் கோரிக்கைகளாகக் கருதுவது ஏன்? அவர்களுக்கு அவை ஏன் அவசியமானவை? அதற்குரிய காரணங்கள் என்ன? அவை எந்த வகையில் நியாயமான கோரிக்கைகள்?

இவை குறித்துத் தென்னிலங்கையில் மக்கள் மத்தியில் தெளிவுபடுத்த —விளக்க வைக்க முயற்சி எடுக்கப்படுவதாயின் அது நிச்சயம் வரவேற்கப்பட வேண்டியது ஆகும்

திம்பு மாநாடு முறிவடைந்த உடனேயே இந்த முயற்சி மேற்கொள்ளப்பட்டிருக்கவேண்டும் ஆனாலும் இப்போது பிந்தி விட்டது என்பதல்ல.

தமிழ் மக்களின் அரசியல் அடிமை நிலை. அவர்கள் சொந்த மண்ணிலிருந்து அவர்களை விரட்டி அடிக்க எடுக்கப்படும் இராணுவ நடவடிக்கை மூலமான முயற்சிகள். வேண்டாத வகையில் அவர்கள் அழித்தொழிக்கப்படுதல் அவர்களது அடிப்படை உரிமைகள் பறித்தெடுக்கப்படுதல், மறுக்கப்படுதல் இவற்றையும் இவற்றால் ஏற்பட்ட விளைவுகளையும் சிங்கள மக்களுக்குத்தெரியப்படுத்துவதால் எமக்கு நஷ்டம் எதுவுமில்லை

உரிமைகளை வென்றெடுப்பதற்கு சமாதான அகிம்சை வழிகளைத் தூரத்தே வைத்து விட்டு தமிழ் இளைஞர்கள் ஆயுதங்களை நாடிய சூழ்நிலை, பின்னணி எவை என்பதையும் சிங்கள மக்களுக்கு விளங்கப்படுத்த முயற்சிக்க வேண்டும்.

சிங்கள மக்களில் குறிப்பிட்ட ஒருகோஷ்டி மூலம் அல்லது கட்சி மூலம் தமிழர் நிலையை விளக்க வைக்க முனைவதைவிட பரந்த மட்டத்தில் அதனைச் செய்வதே பயன் தரும்

திம்புப் பேச்சுவார்த்தைகளின் பின்னர் அரசாங்கம் தன்னிச்சையாகவே மாகாண சபை யோசனையை முன்வைத்திருக்கிறது

அது தமிழ் மக்களின் அபிலாஷைகளை, அடிப்படைக் கோரிக்கைகளைப் பூர்த்தி செய்யவில்லை என்பது வெளிப்படை. அது குறித்து இப்பத்தியில் பல தடவைகள் விளக்கமாக, விவரமாக அலசி ஆராய்ந்துள்ளோம்

மாகாண சபைகளைச் சிங்களப் பேரினவாதிகளும் எதிர்க்கிறார்கள்.

ஆனால் அரசாங்கமும், சிங்களப் பேரினவாதிகளும் சேர்ந்ததுதான் சிங்கள மக்கள் என்று எண்ணிவிடலாகாது

தமிழ் மக்களின் கேவலமான நிலை குறித்து எதுவுமே தெரியாத மக்கள் தென் இலங்கையில் நிறைய இருக்கிறார்கள். தமிழர்களும் மனிதர்கள். அவர்களது நியாயபூர்வமான கோரிக்கைகள் வழங்கப்பட வேண்டும் என்று நோக்கும் நியாய சிந்தை உள்ளவர்களும் இருக்கிறார்கள் அத்தகையோர் எண்ணிக்கையில் குறைவு என்பது உண்மையே.

ஆனால் அவர்கள் மூலம் இன்னும் பலருக்கு தமிழர் நிலையை விளங்கப்படுத்தச் செய்யலாம் குறிப்பாக தென்னிலங்கையில் உள்ள முற்போக்குச் சக்திகள், வெகுஜன இயக்கங்கள் மூலம் தமிழர் நிலையை — அவலத்தை, அவர்களுக்கு நியாயம் கிடைக்க வேண்டியதன் அவசியத்தை பிரசாரப்படுத்துவது சுலபமானதாக இருக்கும்.

எப்படிச் சுற்றிவளைத்துப் பார்த்தாலும் தமிழர் நிலையை எடுத்துச் சொல்லக்கூடிய உட்கருவாக ஆக தென்னிலங்கை வெகுஜன இயக்கங்களே வந்து சேரும்.

ஆகையால், முதலில் தென்னிலங்கை வெகுஜன இயக்கங்களுக்கு தமிழர் நிலையை தெளிவுபடுத்தி, நியாயத்தை உணர்த்துவிக்கச் செய்வதும், அதனை அவர்கள் ஏற்கச் செய்வதும் பிரதானம் அதுவே முதல் முயற்சியாகவும் இருக்க வேண்டும்.

ஏன் இதனைச் சொல்கிறோம் எனின், மாகாணசபையே தமிழர் பிரச்சினையைத் தீர்க்கப் போதுமானது என்று கூறும் முற்போக்குவாதிகளாக நாமம் சூட்டியோரும் தென் இலங்கையில் இருக்கிறார்கள். நிச்சயம் அவர்கள் இந்த முயற்சியில் உதவமாட்டார்கள்.

ஆகவே தமிழர் பக்கத்தில் நியாயம் உண்டு, அவர்களது கோரிக்கைகள் மனித அபிலாஷைகளுக்கு அப்பாற்பட்டவை அல்ல என்பனவற்றையும் புரிந்து கொண்டவர்களை இனங்கண்டு அவர்கள் மூலமே இந்த முயற்சி மேற்கொள்ளப்பட வேண்டும்.

இந்தியாவுக்கு எதிராக பொருளாதாரத் தடை

காஷ்மீர் எதிர்க்கட்சி அரசியல்வாதி கோரிக்கை

லண்டன், அக். 6

காஷ்மீருக்கு சுதந்திரம் வழங்கும் கோரிக்கைகளை வலியுறுத்துவதற்காக சர்வதேச நாடுகள் இந்தியாவிற்கு எதிராக பொருளாதாரத் தடைகள் கொண்டு வர வேண்டும்.

இவ்வாறு கஷ்மீர் எதிர்க் கட்சித் தலைவர் ஒருவர் கருத்து வெளியிட்டார்.

கஷ்மீர் மக்களை பலஸ்தீனவாதிகள் போல இந்திய அதிகாரிகள் நடத்தி வருவதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

லண்டனில் நடைபெற்ற ஆஸாத் ஜம்மு கஷ்மீர் முஸ்லிம் மாநாட்டில் கஷ்மீர் எதிர்க்கட்சித் தலைவர் சுல்தான் மெஹமுட் சௌத்திரி உரையாற்றினார்.

பிரிட்டன், அமெரிக்கா, டென்மார்க், பெல்ஜியம், எகிப்து இந்தியா, பாகிஸ்தான் ஆகிய நாடுகளிலிருந்து மூவாயிரத்திற்கும் அதிகமான கஷ்மீர் மக்கள் இந்த மாநாட்டில் கலந்து கொண்டனர்.

இந்தியா முற்றுமை சொந்தமாகக் கூறப்படும் கஷ்மீர் பிரதேசத்திலிருந்து இந்திய இராணுவம் திருப்பி அழைக்கப்பட வேண்டும் எனவும், மாநாட்டில் கேட்கப்பட்டது.

ஐ.நா சபையின் மேற்பார்வையில் நடத்தப்படும் பொதுஜன அபிப்பிராய வாக்கெடுப்பு மூலம் இரு கஷ்மீர் பகுதிகளும் இணைக்கப்பட வேண்டும் என்றும் அங்கு தெரிவிக்கப்பட்டது. (ஒ)

வீடமைப்புத்தினம் கொண்டாடப்பட்டது

நைரோபி, அக் 6

ஐ.நா சபையால் பிரகடனப் படுத்தப்பட்ட சர்வதேச வீடமைப்புத்தினம் முதற் தடவையாக நேற்று கொண்டாடப்பட்டது.

வீட்டு வசதியின்றி அல்லது வசதிகுறைவான வீடுகளிற் கொண்டு உலகம் முழுதும் உள்ள நூறு கோடி மக்களுக்கு உதவும் நோக்கத்துடனேயே சர்வதேச வீடமைப்புத் தினம் பிரகடனம் செய்யப்பட்டது.

1978 ஆம் ஆண்டு கென்யாவில் அமைக்கப்பட்ட சர்வதேச வீடமைப்பு நிறுவனம் இத்தினத்தை ஒழுங்கு செய்தது.

ஆண்டுதோறும் அக்டோபர் மாதத்தின் முதலாவது திங்கட்கிழமை சர்வதேச வீடமைப்பு தினமாகும். (ஒ)

மாஸ்கோவில் ஊழல் குற்ற விசாரணைகள்

மாஸ்கோ, அக் 6

மாஸ்கோவில் ஊழல் குற்றச் சாட்டின் பெயரில் அரசாங்க உயர் அதிகாரிகள் விசாரிக்கப்படுகின்றனர்.

ரஷ்யா குற்றவியல் விசாரணைப்பிரிவு இதனைச் செய்து வருகின்றது.

விசாரணைகளில் ஈடுபடுவோரை அரசாங்க ஊழியர் அச்சுறுத்திய சம்பவமும் இடம்பெற்றதாக அறிவிக்கப்பட்டது. (ஒ)

உகண்டாவில் 90 பேர் பலி

கம்பாலா, அக் 6

உகண்டாவின் வடக்குப் பகுதியில் இராணுவத்துடன் நடைபெற்ற சண்டையில் 90 கிளர்ச்சியாளர்கள் கொல்லப்பட்டனர். (ஒ)

பங்களாதேஷில் தடை உத்தரவு

டாக்கா. அக். 6

பங்களாதேஷில் வரும் 15 ஆம் திகதி நடத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ள ஜனாதிபதி தேர்தலுக்கு எதிராக எந்த விதமான பிரச்சாரங்கள் செய்வதையும், ஆர்ப்பாட்டங்கள் நடத்துவதையும் தடைசெய்யும் இராணுவசட்ட உத்தரவை அரசாங்கம் பிறப்பித்துள்ளது

இதனை மீறினால் ஏழு வருட கடூழிய சிறைத் தண்டனை விதிக்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது (ஒ)

வெளி உலகில்

தீ விபத்துக் கப்பல் மீண்டும் பயணம்

மாஸ்கோ, அக் 6

அத்திலாந்திக் கடலில் தீப்பிடித்த ரஷ்ய அணு ஆயுத நீர்மூழ்கிக் கப்பல் வேறு ஒரு ரஷ்ய கப்பலின் உதவியுடன் மீண்டும் தனது பயணத்தை வடமேற்கு நோக்கி ஆரம்பித்துள்ளது.

அதுபோய் சேரும் இடம் இதுவரையில் அறிவிக்கப்படவில்லை

இக் கப்பலில் இருந்த காப்பாற்றப்பட்ட ஊழியர்கள் சகலரும் ரஷ்ய வர்த்தக கப்பலொன்றுக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

நீர் மூழ்கிக் கப்பலில் இருந்து நெருப்பு முற்றாக அணைக்கப்பட்டுவிட்டதென்றும் கதிரியக்க கசிவு ஏற்படக் கூடிய ஆபத்து எதுவும் இல்லையெனவும் அறிவிக்கப்பட்டது. (ஒ)

பெருவில் பொலிஸ் பலி

லீமா, அக் 6

பெருவில் நடைபெறும் ஆர்ப்பாட்டங்களில் சுமார் 20 பொலிஸார் கொல்லப்பட்டிருக்கலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது

கடந்த இரு தினங்களாக மாஓ கம்யூனிஸ கிளர்ச்சியாளர்கள் இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு வருகின்றார்கள்.

தெற்கு பெருவில் புகையிரத நிலையம் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டபோதே பொலிஸார் பலியானார்கள்.

கிளர்ச்சியாளர்களிடையிலும் பலத்த சேதம் ஏற்பட்டிருக்கலாம் என அரச வட்டாரங்கள் தெரிவித்தன (ஒ)

பொருளாதாரத் தடை பாதிப்புத் தவிர்க்க நடவடிக்கை

ஹராரே, அக்.6

தென் ஆபிரிக்காவிற்கு எதிராக கடுமையான பொருளாதாரத் தடைகள் விதிக்கப்பட்டால் ஸிம்பாப்வேயும் ஸாம்பியாவும் பாதிப்படைவது தடுக்கப்பட வேண்டும்.

இவ்வாறு ஸிம்பாப்வே பிரதமர் ரொபேர்ட் முகாபே தெரிவித்தார்

இந்நாட்டு வர்த்தகங்கள் விஸ்தரிப்பதற்கு இந்து சமுத்திரத்தில் உள்ள துறைமுகங்களிலிருந்து பொருட்களை அனுப்பி வைப்பதற்கு வசதியாக புகையிரத போக்குவரத்துப் பாதைகள் புனரமைக்கப்படும்.

அணிசாரா இயக்கம் புதிதாக ஆரம்பித்துள்ள ஆபிரிக்க நிதியத்திலிருந்து இதற்கான பணம் வழங்கப்படும். (ஒ)

அக்கினோவின் சுயசரிதை வெளிவரும்

மணிலா, அக் 7

தனது வாழ்வின் சுயசரிதையை எழுதத்தொடங்கியிருக்கும் திருமதி அக்கினோ அடுத்த வருட இறுதிக்குள் அதனை வெளியிடுவார் என எதிர்பார்க்கப்படுகிறது (ஒ

தென் இலங்கை முற்போக்கு சக்திகளின் மாநாடு ஒன்றை

பாங்கொக்கில் கூட்ட முயன்றோம்

ஈரோஸ் இயக்க முக்கியப் பிரமுகரான திரு ஆர் சங்கர் யாழ்ப்பாணத்தில் இருந்து வெளிவரும் சற்றடே, ரிவியூ' வின் சென்னைச் சிறப்புச் செய்தியாளருக்கு அளித்த பேட்டியின் இறுதிப் பகுதி இன்று பிரசுரமாகிறது.

இப்பேட்டி 'சற்றர்டே ரிவியூ' வின் செப்டம்பர் 13 ஆம் திகதி இதழில் பிரசுரமானது

கேள்வி: தெனிலங்கை இலக்குகள் பற்றி நீங்கள் சொல்ல ஏதாவது இருக்கிறதா?

பதில்: அடிப்படையில் போராட்டத்தில் வித்தியாசமான புதிய இராணுவ உத்திமுறை கடைப்பிடிப்பதையே ஆரம்பத்தில் இருந்து ஈரோஸ் விரும்பி வந்தது.

துரதிருஷ்டவசமாக வேறு அமைப்புக்கள் வித்தியாசமான உத்திகளைக் கடைப்பிடித்து வருவதால், எமது நடைமுறையிலும் மாற்றங்களைக் கொண்டு வரும் நிர்ப்பந்தம் ஏற்பட்டது. இதில் ஒன்றுதான் குறிப்பாக தென் இலங்கையில் உள்ள பொருளாதார, கைத்தொழில், பல் நிறுவனத் தொழில் நிலையங்கள் மீதான தாக்குதல்கள் ஆகும்.

இந்த அடிப்படையில் எமதுசெயல்பாடுகள் குடிமக்கள் பாதிக்கப்படாத அல்லது மிகவும் குறைந்த எண்ணிக்கையினரான குடிமக்கள் பாதிக்கப்படக்கூடிய வித்தில் பொருளாதாரப் பாதிப்பை ஏற்படுத்துவதே.

எமது அண்மைக்கால செயல்பாடு ஒன்றில் நியாயமான எண்ணிக்கைக்கு மேற்பட்ட குடிமக்கள் பாதிக்கப்பட்டனர் என்பது எமது கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டது

இந்த நிலைமை குறித்து மிகவும் வருந்துகிறோம். எதிர்காலத்தில் எமது இராணுவ இலக்காக சிவிலியன் இலக்கு ஒன்றைத் தெரிவு செய்ய மாட்டோம் என்று நான் வலியுறுத்த விரும்புகின்றேன்

எமது கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட முறையில் சில சம்பவங்கள் உள்ளன. இதனால் தவிர்க்க முடியாத உயிரிழப்புகள் ஏற்படுகின்றன. இது எமக்கு வருத்தத்தைத் தருகிறது.

எமது எதிர்கால இராணுவ நடவடிக்கைகளை வகுக்கும்போது இது குறித்து தீவிர கவனஞ் செலுத்துவோம்

தொடரான இராணுவ நடவடிக்கைகள் தமிழ் பேசும் மக்களின் கோரிக்கைகளுக்கு விட்டுக் கொடுக்க வேண்டிய நிர்ப்பந்தத்தை இலங்கை அரசுக்கு ஏற்படுத்தும் இப்படி நாம் எண்ணுகிறோம்.

உத்தேச இராணுவ செயல்பாடுகள் குறித்து போதுமானவைகளை எடுக்கின்றோம். பெரும்பாலான நடவடிக்கை எடுக்கும் முன்னர் எச்சரிக்கைகளையும் விடுக்கின்றோம்.

சில சந்தர்ப்பங்களில் எமது எச்சரிக்கையை அரச அதிகாரிகள் பொருட்படுத்துகிறார்கள் இல்லை. குடிமக்கள் பாதிப்படைவதற்கு இதுவும் ஒரு காரணம்.

எமது போராட்டம் சிங்கள மக்களுக்கு எதிரானதல்ல.

பாசிஸ அரசாங்கத்துக்கும் மொஸாட் எஸ்ஏஎஸ் கூலிப்படை, பாகிஸ்தான், தென்ஆபிரிக்காக் கூலிப்படைகள் ஆகியவற்றுக்கு எதிரானதே எமது போராட்டம்.

கேள்வி: சிங்களஇடதுசாரித் தலைவர்கள் சென்னை சென்று போராளித் தலைவர்களைச் சந்தித்தனர். இந்த விஜயங்களின் பலாபலன்கள் என்ன?

பதில்; 1986க்கு முன்னர் இதுபோன்ற சந்திப்புகளை ஈரோஸ் விரும்பியது.

1985இல தென்னிலங்கை முற்போக்குச் சக்திகளின் மாநாடு ஒன்றை பாங்கொக்கில் நடத்த நாம் உண்மையில் முயற்சித்தோம்.

தமிழருக்கு மட்டும் அல்ல சிங்களவருக்கும் உதவக்கூடிய விதத்தில் ஜயவர்த்தன அரசாங்கத்திடம் இணைந்த அரசியல் திட்டம் ஒன்றை வகுப்பதே தமது நடவடிக்கையின் நோக்கமாக இருந்தது குறிப்பாக இலங்கை மக்கள் கட்சித் தலைவர் திரு விஜய குமாரணதுங்கவும் ஏனைய அரசியல் கட்சித் தலைவர்களும் சென்னை வந்து திரும்பியமை திரு ஜெயவர்த்தனவை சங்கடத்தில் இருந்து காப்பாற்றவே.

சர்வகட்சி மாநாடு அல்லது அரசியல் கட்சி மாநாடு ஆகியவற்றை அவர்கள் முன்வைத்தது மட்டுமல்ல, இலங்கை அரசுக்கும் தமிழ்ப் போராளிகளுக்கும் இடையே மத்தியஸ்தம் செய்யவும் தான் அவர்கள் வந்தார்கள்.

இதற்கு இவர்கள் முக்கியத்துவம் கொடுத்தது துரதிருஷ்டவசமானது.

தமிழர் பிரச்சினைக்கு ஜெயவர்த்தன அமைதித் தீர்வு காணப் போவது இல்லை; அதே நோக்கில் சிங்கள மக்களின் துன்பங்களை துடைக்கப் போவதுமில்லை.

இதனை சென்னை வந்த சிங்கள இடதுசாரித் தலைவர்கள் காலப்போக்கில் உணருவார் என்பது நம்பிக்கை.

(முற்றும்)

சமய நிகழ்ச்சிகளில்

ஸ்ரீ பத்திரகாளி அம்மன் உற்சவம்

யாழ்ப்பாணம், அக். 7

கிழக்கிலங்கையில் பிரசித்திபெற்ற பெரிய போரதீவு, முனைத்தீவு ஸ்ரீ பத்திரகாளி அம்மன் ஆலய வருடாந்த உற்சவம் 4 ஆம் திகதி ஆரம்பமானது

எதிர்வரும் 14 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நோர்ப்புக் கட்டும் வைபவமும் 15 ஆம் திகதி தீமிதிப்பு வைபவமும் நடைபெறும். (இ)

பொய்யாமொழி

குறள்:

தவமறைந்து அல்லவை செய்தல் புதல் மறைந்து
வேட்டுவன் புள்சிமிழ்த் தற்று

பொருள்:

[illegible] செயல்களைச் செய்தல், புதரில் [illegible] பிடித்தலைப் போன்றது.

நவராத்திரி சிறப்பம்சம்

நவராத்திரிப் பாட்டு

மாதா பராசக்தி வையமெலாம் நீ நிறைந்தாய்!
ஆதாரம் உன்னையல்லால் ஆரெமக்குப் பாரினிலே!
ஏதாயினும் வழிநீ சொல்வாய் எமதுயிரே!
வேதாவின் தாயே! மிகப்பணிந்து வாழ்வோமே.

வாணி

வாணி கலைத்தெய்வம் மணிவாக் குதவிடுவாள்
ஆணிமுத்தைப் போலே அறிவுமுத்து மாலையினாள்
காணுகின்ற காட்சியாய்க் காண்பதெலாம்
காட்டுவதாம்
மாணுயர்ந்து நிற்பாள் மலரடியே சூழ்வோமே

ஸ்ரீதேவி

பொன்னரசி நாரணனார் தேவி, புகழரசி
மின்னுநவ ரத்தினம்போல் மேனி யழகுடையாள்.
அன்னவள் வையமெலாம் ஆதரிப்பாள், ஸ்ரீதேவி
தன்னிரு பொற்றாளே சரண்புகுந்து வாழ்வோமே

பார்வதி

மலையிலே தான் பிறந்தாள் சங்கரனை
மாலையிட்டாள்,
உலையிலே யூதி உலகக் கனல் வளர்ப்பாள்
நிலையில் உயர்த்திடுவாள், நேரே அவள் பாதம்
தலையிலே தாங்கித் தரணிமிசை வாழ்வோமே.

— மகாகவி சுப்பிரமணிய பாரதியார்

வாசகர் திருமுகம்

உள்ளூர் தொலைக் காட்சியின் போக்கு

இன்றைய கால கட்டத்தில் நாம் எதிர்நோக்கும் பிரச்சினைகள் எண்ணில் அடங்காதவை.

பிரச்சினைகள் ஒருபுறம் இருந்தாலும் மக்களின் தேவைகளை நிறைவேற்றும் ஒழுங்குகள் நடந்து வருகின்றன.

உள்ளூர் தொலைக்காட்சி (வீடியோ) இன்று எல்லா இடங்களிலும் ஒளி பரப்பப்படுகின்றது

காலத்திற்கு ஏற்ற மாதிரி ஒளிபரப்புக்களைச் செய்யாமல் ஒளிபரப்படுகின்ற எல்லா நிகழ்ச்சிகளும் அநேகமாக ஆடம்பரம் மிக்கவையாகவே காணப்படுகின்றன இவையெல்லாம் அவசியமா?

குறிப்பாகச் சொன்னால் திருமணவிழா, புதுமனை புகு விழா, பூப்புனித நீராட்டு விழா இவை எல்லாம் ஒளிபரப்பப்படத்தான் வேண்டுமா?

இதனால் கிடைக்கும் நன்மைதான் என்ன? இவை எல்லாவற்றையும் விட்டு அறிவுசம்பந்தமாக அல்லது கல்வி தொடர்பான ஏதாவது நிகழ்ச்சிகளை ஒளிபரப்பலாம்தானே. அல்லது எம் கலை, கலாசாரங்கள் பேணப்படவேண்டுமானால் நாடகம், நாட்டியம் போன்ற நிகழ்ச்சிகளை ஒளிபரப்பலாம்

யாழ்ப்பாணம் நலன் விரும்பி

வயாவிளான் பகுதிக்கு மீண்டும் மின்சாரம்

பலாலி, அக் 7

நீண்ட நாட்களாக வயாவிளான், ஒட்டகப்புலம் மக்களுக்கு தடைப்பட்டிருந்த மின்சாரம் தற்போது மீண்டும் கிடைத்திருக்கின்றது.

வயாவிளான் மத்திய மகா வித்தியாலயத்தில் இராணுவ முகாம் அமைக்கப்பட்டதன் பின்னர் அப்பகுதியில் அமைந்திருந்த மின்மாற்றி பழுதடைந்திருந்தது.

அதனை திருத்த அங்கு செல்வதற்கு மயிலிட்டி உப அலுவலக ஊழியர்கள் பாதுகாப்புக் கருதி மறுப்புத் தெரிவித்திருந்தனர்.

(உ-119)

YOUR FRIENDS
IN
FINANCE
SHABRA
நிதித்துறையில்
உங்கள் நம்பிக்கையுள்ள நண்பன்
Shabra Unico Finance Ltd.

உதயன்

07- 10 - 1986 செவ்வாய்க்கிழமை

YOUR FRIENDS
IN
FINANCE
SHABRA
நிதித்துறையில்
உங்கள் நம்பிக்கையுள்ள நண்பன்
Shabra Unico Finance Ltd.

வித்தாரம்

தம்பி முரளி, கண்டு கன நாளாய்ப்போச்சு, எப்பிடிச் சுகமோ? சாமான் சக்கட்டை எல்லாம் கிடைக்குதோ? விலை ஏத்தங்கள் இறக்கங்கள் எப்பிடி?

ஐஞ்சாறு நாளா தம்பி பிடுப்போன லொறியள் எல்லாம் புத்தளத்துக்குள்ளை வெளிக்கிட ஏலாமல் கறையான் மாதிரி ரவுண் றோட்டுகளில அடுக்கடுக்காக நிண்டுதுகள். சனம் றோட்டாலை போறவர முடியாமல சங்கடப்படுகுதுகள். காலமைதொடக்கம் பின்னேரம் வரை அதே நிலைதான்.

நல்ல காலம் ஒரு மாதிரி லொறிக்காரர் மீண்டும் ஓடுறது எண்டு முடிவு செய்திட்டினம். மேலும் ஒரு கிழமைக்கு லொறியள் ஓடாவிட்டா பெரிய கஷ்டமாய்த்தான் இருந்திருக்கும்.

என்னதான் [illegible] நாங்கள் சொன்னாலும் கொழும்பிலை இருந்து சாமான் சக்கட்டை வரவில்லை எண்டா என்ன பாடுபடவேணும். சாமான்கள் மட்டுமில்லை எல்லா விஷயத்திலையும் எங்கடெண்டு ஒரு நிலை வருமட்டும் கொழும்பைத்தான் நம்பிருக்க வேண்டி இருக்குது. இந்த நிலையை இப்போது இருந்தே நீக்குவதுதான் எங்கடை முதல் வேலையாக இருக்கவேணும்.

லொறிச் சொந்தக்காரரின் வேலைநிறுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவர எல்லாரும் ஒத்துழைப்புக் குடுத்தது மகிழ்ச்சிக்குரியது.

தனிச்சுத் தனிச்சு நிண்டாலும் இப்பிடியான பொது விஷயங்களிலையாவது ஒற்றுமை இல்லாட்டா பெரிய கஷ்டங்கள் வரும் எண்டது உண்மை. இதை எங்கடை தம்பிமார் கொஞ்சம் ஜீரணிக்கப் பழக வேணும். அது இப்ப கொஞ்சம் கொஞ்சமாவது நடக்கிறது சனத்துக்குச் சந்தோஷம்.

நான் நேற்றைக்குக் காலமை வேலைக்குப் போகயிக்கை இரண்டு பேர், தம்பிமார் இந்த விஷயத்தில நடந்ததைப் பாராட்டிக் கதைச்சதை என்ரை காதால கேட்டேன் அப்பா! திரும்பிப் பாத்தா வீதியெல்லாம் லொறியா நிண்டுது. வாயெல்லாம் பல்லாய்த் தெரிஞ்சுதுபோலை!

* * *

தம்பிமாரைப் பற்றிக் கதைச்சதாலை ஒரு முக்கியமான விஷயம் ஞாபகத்துக்கு வருகுது, கடைசியாகக் கிடைச்ச அந்தரங்கச் செய்தி அது.

உந்த இழுத்தடிபடுற இனப்பிரச்சினையைப் பற்றி எப்பிடியும் எங்கடை தம்பிமாரோடை பேச வேணும் எண்ட இரத்தஓட்டம் இப்ப அரசாங்க உயர்மட்ட உடம்பிலை ஓடுதாம்.

கூட்டணியோடை பேசி வேலையில்லை; இந்திய அரசாங்கத்தோடை தனியப்பேசி வேலையில்லை எண்ட ஞானம் அரச உயர்பீடத்துக்கு உதிச்சிட்டுதாம். பேசவேண்டிய இடத்தோடை பேசாமல் மற்றவையோடை பேசி என்ன நடக்கப் போகுது எண்டு வாய் திறந்து சொல்லுற அளவுக்கு சில அரச ஆதரவாளர்கள் வந்துவிட்டார்களாம்.

இன்னும் சில நாட்களுக்குள்ளை அது வெறும் பேச்சாக இல்லாமல் மிக விரைவில் செயலாக மாறும் எண்டும் சொல்லுது. பொறுத்திருந்து பாப்போமே ...

* * *

கொழும்பிலை புதிய அரசியல் கட்சி ஒண்டு உதிக்கப்போகுது எண்டு அங்கை பேச்சாக் கதையள் அடிபடுகுது மதியுகோ...

இப்ப அரசாங்கத்திலை பெரிய பிரதம பதவியை வகிக்கிற ஒருவரும், அவரோடை நெருங்கிய சகபாடியான கொழும்பு வாசியும் இது குறித்துத் தீவிரமாக ஆலோசனையள் நடத்தி வருவதாகக் கதை. அவை இரண்டு பேரோடும் சினிமாக்காரரான அரசியல்வாதி ஒருவரும் சிலவேளை புதிய கட்சியில் சேர்க்கப்படுவாராம்.

இதுக்கிடையிலை அரசாங்கத்தின்ரை பெரிய தலை ஒண்டு தன்ரை ராஜினாமாக் கடிதத்தைக் கொடுத்துவிடப் பெரும் முயற்சி செய்வதாகவும் சொல்லுகினம்.

அரசியல் எண்டாக் உதுகள் எல்லாம் சகஜம் தானே...!

* * *



விசுவமடுவில் நேற்று ஆர்ப்பாட்டப் பேரணி

யாழ்ப்பாணம், ஆக். 7 விசுவமடுப் பகுதியில் நேற்று ஆயிரக்கணக்கானோர் கலந்துகொண்ட மாபெரும் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்று நடைபெற்றது.

நேற்றுக்காலை 8-30 மணி அளவில் சுதந்திரபுரத்திலிருந்தும் றெட்பாணாவிலிருந்தும் ஆரம்பமாகிய இந்த பேரணி விசுவமடுவில் முடிவுற்றது. ஈழவர் முன்னணியால் இப்பேரணி நடத்தப்பட்டது.

மட்டக்களப்பில் படுவான்கரையில் நிகழ்த்தப்பட்ட இராணுவ அடாவடித் தனங்களைக் கண்டித்தும் — மலையகத்தில் கைது செய்யப்பட்ட இளைஞர்களை விடுவிக்கக் கோரியும் —

சிறையில் வாடும் இளைஞர்களை நிபந்தனையின்றி விடுதலை செய்யக் கோரியும் —

திருகோணமலையிலிருந்து முல்லைத்தீவை நோக்கி வரும் அப்பாவி மக்களை விரட்டி அடிப்பதை ஆட்சேபித்தும் — இப்பேரணி நடத்தப்பட்டது.

பேரணியின் முடிவில் நடைபெற்ற பெருங்கூட்டத்தில் ஈழவர்முன்னணி சார்பில் திரு. துரைரத்தினம் உரையாற்றினர். (உ-10)

ரமேஷ் விடுதலையாவார் என்று அறிவிப்பு

உரும்பராயில் ஊர்வலம் நடந்தது

யாழ்ப்பாணம், ஆக். 7 திரு. ரமேஷ் விரைவில் விடுதலை செய்யப்படுவார் என்று ஈ. பி ஆர். எல் எவ் அறிக்கை ஒன்றின் மூலம் தெரிவித்திருக்கிறது.

— தோழர் ரமேஷ் தொடர்பான பிரச்சினையில் கடைபிடிக்கப்பட்ட அணுகு முறையில் ஏற்பட்ட தவறுகளை சுயவிமர்சன அடிப்படையில் ஏற்றுக் கொள்கிறோம்.

இந்த அடிப்படையில் தோழர் ரமேஷ் விரைவில் விடுதலை செய்யப்படுவார்.

அவர் தொடர்பான பிரச்சினைகள் ஒழுங்கு முறைக் கூடாக கையாளப்பட்டு விதாபன எல்லோருக்கும் தீர்க்கப்படும் என்பதை எமது மக்களுக்கு அறியத் தருகிறோம் — இவ்வாறு ஈ பி ஆர் எல். எவ். விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது

ஊர்வலம்

இதே திரு. ரமேஷை விடுதலை செய்யக் கோரி நேற்று உரும்பராயில் இருந்து யாழ் பல்கலைக் கழகம் வரை ஊர்வலம் ஒன்று நடத்தப்பட்டது. ஊர்வலம் முடிவில் பொதுக்கூட்டம் ஒன்றும் இடம் பெற்றது.

மக்களின் ஜனநாயக உரிமைகளுக்கு மதிப்பளித்து ரமேஷ் விடுதலை செய்யப் படவேண்டும் என்று கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டது. (இ)

தமிழ் மாணவர் மீது நடந்த முதல் தாக்குதல்

சிங்களம் மட்டும் சட்டமே

சமசமாஜப் பிரமுகர் சொல்கிறார்

கொழும்பு, ஆக். 7 சிங்களம் மட்டும் சட்டம் தான் தமிழ் மாணவர் மீது நடத்தப்பட்ட முதல் தாக்குதலாகும்— இப்படி லங்கா சமசமாஜக் கட்சிப்பிரமுகரான சட்டத்தரணி திரு தென்னக்கூன் அபயசிங்க, நாவலபிட்டியில் நடந்த கட்சிக் கூட்டத்தில் சொன்னார்.

மொழிப் பிரச்சினை தான் இன்றைய நிலைக்குக் காரணம். 1956 இல் இருந்து தமிழ் மாணவர் சகல துறைகளிலும் புறக்கணிக்கப்பட்டே வந்தனர்.

பல்கலைக் கழகங்களில் கூட தமிழ் மாணவர் தனியாக ஒரு மண்டபத்திலும் சிங்கள மாணவர் தனியாகவும் வைக்கப் பட்டிருந்தனர்.

சந்தர்ப்பவாத அரசியல் வாதிகள் தம் மக்களை காலத்துக்குக் காலம் ஏமாற்றி வந்துள்ளனர்.

இப்படி அவர் மேலும் சொன்னார். (அ-எ)

எம். ஜி. ஆர். மீண்டும் அ. தி மு. க. செயலாளரானர்

சென்னை, ஆக் 6 அண்ணா திராவிடமுன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளர் பதவியை முதலமைச்சர் திரு எம் ஜி. இராமச்சந்திரன் ஏற்றுக்கொண்டிருக்கிறார்.

நேற்று நடந்த அறிமுக செயற்குழுக் கூட்ட முடிவில் இது அறிவிக்கப்பட்டது.

உதவிப் பொதுச் செயலாளராக சுகாதார அமைச்சர் திரு. பி. எச். ஹண்டே நியமிக்கப்பட்டார்.

இதுவரை காலமும் முன்னாள் அமைச்சர் எம். இராகவானந்தம் பொதுச் செயலாளராக இருந்தார்.

1978இல் அ.தி.மு க. உருவாக்கப்பட்டபோது முதலாவது பொதுச் செயலாளர் திரு எம். ஜி இராமச்சந்திரன்தான் தெரிவு செய்யப்பட்டார்.

கட்சியைப் பலப்படுத்தவே முதலமைச்சர், மீண்டும் பொதுச் செயலாளர் பதவியை ஏற்றிருப்பதாக அறிவிக்கப்பட்டது. (உ-எ)

எகிப்தில்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

இடையே பேச்சுகள் நடந்து முடிந்துள்ளன.

இப்போது எகிப்து அரசுடன் இலங்கை அதிகாரிகள் பேச்சுக்களை நடத்தியிருக்கின்றனர்.

தேசிய பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத் முதலி கடந்த 25-ம் திகதி எகிப்துக்கு உத்தியோக பூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு சென்றிருந்தார். அமைச்சர் இன்னும் வெளிநாட்டில் இருந்து வரவில்லை (அ-எ)

புதிய ..

(1ம்-பக்கத் தொடர்ச்சி)

தனித்துவமான பண நோட்டுக்களின் தேவை உணரப்பட்டுள்ளது.

இதன் பொருட்டு தமிழீழத்துக்கானபணநோட்டுகள் 1987 ஆம் ஆண்டிலிருந்து வெளிவருவதற்கான நடவடிக்கைகள் எம்மால் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

இதுபற்றிய மேலதிகமான விபரங்கள் விரைவில் மக்களுக்கு அறிவிக்கப்படும். (உ)

கருத்தரங்கு ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம் ஆக். 7 காங்கேசன்துறை வட்டாரப் பாடசாலை ஆசிரியர்களுக்காக யூனியன் கல்லூரியில் இன்று நடைபெறவிருந்த ஆரம்ப சுகாதாரக் கணிப்புக் கருத்தரங்கு ஒத்திவைக்கப் பட்டுள்ளதாக காங்கேசன்துறை வட்டாரக் கல்வி அதிகாரி திரு பொ. சிவஞானசுந்தரம் அறிவித்துள்ளார்.

புதிய திகதி பின்னர் அறிவிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது (உ)

லொறிச்சேவை மீண்டும் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஆக். 7 நேற்று முதல் தூர இடங்களுக்கானலொறிச் சேவைகள் ஆரம்பிக்கப் பட்டுள்ளன.

அண்மையில் விசுவமடுப்பகுதியில் நடைபெற்ற லொறிக்கொள்ளைகளைக் கண்டித்து ஒரு வாரகாலமாக தூர இடங்களுக்கானலொறிச் சேவைகள் நிறுத்தப்பட்டிருந்தன.

சகல விடுதலை ஸ்தாபனங்களும் இதற்குப் பொறுப்பெடுத்து இனிமேல் இப்படியான சம்பவங்கள் எதுவும் நடைபெறாது பார்த்துக் கொள்ளப்படும் என்று உறுதியளித்திருந்தன.

அதனையடுத்து நேற்று முதல் மீண்டும் லொறிச் சேவைகள் ஆரம்பிக்கப் பட்டுள்ளன.

கொழும்பில் இருந்து நேற்று லொறிகள் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தன. (உ-10)

நாளை இரத்ததானம்

யாழ்ப்பாணம், ஆக். 7 உலக லயன்ஸ் சேவை தினத்தை முன்னிட்டு நாளை புதன்கிழமை 8 ஆம் திகதி காங்கேசன்துறை ஈவினை மருத்துவமனையில் இரத்ததான நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

மாவிட்டபுரம் லயன்ஸ் கழகத்தின் ஏற்பாட்டில் நாளை காலை 9 மணிக்கு இந்த நிகழ்ச்சி நடைபெறும். (உ)

சாம்பல்தீவில்..

(1ம் பக்கத் தொடர்ச்சி)

போது மொத்தம் 61 பேர் கைதுசெய்யப் பட்டனர். இவர்களில் 36 பேர் முஸ்லிம்கள் என்று தெரிவிக்கப்படுகிறது. (உ - எ - 150)

களுத்துறை மாவட்டசபையில் பேச்சு:

தமிழ்ப் போராளிகளுடன் அரசாங்கம்பேசவேண்டும்

இந்தியாவுடன் பேசிப் பயனில்லை

கொழும்பு, ஆக். 7 வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நிரந்தர அமைதி ஏற்பட வேண்டும் என்றால், தமிழ்ப் போராளித் தலைவர்களுடன் இலங்கை அரசு பேசவேண்டும்; இந்திய அரசு பிரதிநிதிகளுடன் பேசிப்பயனில்லை.

இப்படி களுத்துறை மாவட்ட அபிவிருத்திச் சபைக்கூட்டத்தில் பேசுகையில் திரு. ஹேமா ஜெயவர்த்தன என்ற உறுப்பினர் குறிப்பிட்டார்.

அரசியற் கட்சிகள் மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட இனப்பிரச்சினை யோசனைகளை நிறைவேற்ற ஜனாதிபதிக்கு முழு ஆதரவு வழங்கவேண்டுமென்ற பிரேரணை மீது அவர் பேசினர்.

இனப்பிரச்சினைக்கு விரைவில் தீர்வு காணப்படவேண்டும் எல்லோருடைய விருப்பமும் அதுவே. அரசாங்கம் இந்திய அரசப் பிரதிநிதிகளுடன் வருடக் கணக்காக இதுபற்றிப் பேசிக்கொண்டிருப்பதில் ஒரு பிரயோசனமும் ஏற்படாது.

போராளித் தலைவர்களுடன் பேசித்தான் இப்பிரச்சினைக்குமுடிவுகாண வேண்டும் என்று அரசாங்கம் திடசங்கற்பம் எடுக்கவேண்டும். அப்போதுதான் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணலாம்.

இப்படி அந்த உறுப்பினர் சொன்னார் (அ-எ)

விளையாட்டரங்கு

முல்லைத்தீவு

இலங்கை வங்கிக்கிளை சாம்பியனுகியது

யாழ்ப்பாணம், ஆக் 7 முல்லைத்தீவு மாவட்ட விளையாட்டுச் சங்கத்தினால் நடத்தப்பட்ட முல்லை மாவட்ட திணைக்களங்களுக்கிடையிலான கிரிக்கெட் போட்டியின் இறுதிப் போட்டி கடந்த வியாழக்கிழமை முல்லைத்தீவு மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெற்றது.

இலங்கை வங்கிக் கோஷ்டிக்கும் சமூகநலச் சேவைகள் திணைக்களத்திற்குமிடையில் நடைபெற்ற இப்போட்டியில் இலங்கை வங்கிக் கோஷ்டி முல்லை மாவட்டச் சமூகச் சேவைகள் திணைக்களத்தை 33 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோற்கடித்து சாம்பியனுனது.

இப்போட்டியில் திரு. க. பொன்னம்பலம் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார். வெற்றியீட்டிய கோஷ்டிகளுக்குப் பரிசில்களை அவர் வழங்கினர்.

போட்டிக்குரிய ஒழுங்குகள் யாவற்றையும் முல்லைமாவட்ட விளையாட்டு அதிகாரி திரு த நடராசா மிகச்சிறப்பாகச் செய்து போட்டியை நடத்தி முடித்தார். போட்டியில் பரிசு பெற்றோர் விபரம் வருமாறு:-

1. சாம்பியன்- முல்லை மாவட்ட இலங்கை வங்கி

இரண்டாவது இடம் முல்லை மாவட்டச் சமூகநலத் திணைக்களம்.

இறுதிப் போட்டியில் சிறந்த ஆட்ட வீரர் எஸ் நிக்லஸ் நடராஜா. இலங்கை வங்கி

முழுப் போட்டிகளிலும் சிறந்த வீரர் நாகநாதன், பெருந்தெருக்கள் திணைக்களம் முல்லைத்தீவு. (இ)

பாதிக்கப்பட்டோர் மதிப்பீட்டு

விண்ணப்பங்களை உடன் ஒப்படைக்க கோரிக்கை

யாழ்ப்பாணம், ஆக். 7 பாதிக்கப்பட்டவர்களின் மதிப்பீட்டிற்கான விண்ணப்பப் படிவங்களை உதவி அரசாங்க அதிபர் அலுவலகங்களில் பெற்றுக்கொண்டவர்கள் அவற்றை உடன் நிரப்பி தாமதமின்றி தமது பகுதி கிராம சேவகரிடம் ஒப்படைக்க வேண்டும்.

—இப்படி திட்டமிடல் உதவிப் பணிப்பாளர் திருமதி சரோஜினி கணேந்திரன் கேட்டுக் கொண்டுள்ளார்.

காயமடைந்தோர், ஊனமுற்றோர், பாதிப்புற்றோரின் தங்கியிருப்போர் அசையும், அசையாத உடமைகளை இழந்தோர் காணுமல் போனோர் ஆகியோரைப் பற்றிய தகவல்களை இப்படிவங்களில் நிரப்ப வேண்டும். (உ.5)

முடிவுகள்

சீக்கோ-டிஸ்கோ வி.க நடாத்தப்பட்ட சீட்டிழுப்பில் வெற்றியீட்டிய போர் விவரம் வருமாறு இவர்கள் தங்கள் பரிசுகளை எதிர் வரும் சனிக்கிழமை பெற்றுக்கொள்ளலாம். இடம் கந்தரோடை. 252, 450, 1125. 467, 659, 444, 1423,1884,1580,1115, 1192,2581,1298,1579, 1410 1606,1404,1561, 1608,435 1111. இவ் வெண்கள் ஒன்றிலிருந்து 21 ஒன்றாக அமையும்.

● டென்மார்க்
● ஜேர்மனி
● லண்டன்
● கனடா
● அவுஸ்திரேலியா

நம்பிக்கை வாய்ந்த
பயணம்

உடனடியாக

தாமதமின்றித்
தொடர்பு கொள்க.

எங்கள் சேவைகள்:

- எல்லா நாடுகளுக்கும் பிரயாண ஒழுங்குகள்
- துரிதமான பாஸ்போர்ட், விசா, பொண்ட் ஒழுங்குகள்
- CONFIRMATIONS, RE-CONFIRMATIONS & CANCELLATIONS
- இந்தியப் பயணத்தில் விசேட வசதிகள்

யாழ்.-கொழும்பு
விமான சேவை

ஸைலிற்கு விசேட
போக்குவரத்து வசதிகளுடன்

ஒழுங்காக நடைபெறுகிறது

உங்கள் ஆசனங்களைப்
பதிவு செய்க.

தாதி வேலையில்
5 வருட அனுபவமுள்ளவர்கள்
எம்முடன் தொடர்பு
கொள்ளவும்

ரெலிபோன் - ரெலெக்ஸ்
முதல் தரமான சேவை
Open 24 Hours

Mack Communications & Travels

இல. 8, முதலாவது ஒழுங்கை, பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம். Tele:- 24791, 24836

dyn ads

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், மின்சார நிலையவீதி, இரண்டாம் ஒழுங்கை 15 ஆம் இலக்கத்தில் உள்ள உதயன் பப்ளிகேஷன்ஸ் (பிரைவேட்) லிமிடெட் ஸ்தாபனத்தாரால் அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. தேதி 07—10—1986.

Printed and Published by Uthayan Publications (Private) Ltd. 15 Second Lane, Power House Road, JAFFNA. Registered as a Newspaper at the General Post Office Sri Lanka Under Number QJ60 N86.